பக்கங்கள்: 08

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2054 தை 09 திங்கட்கிழமை 23.01.2023 கதிர் 328

## மக்கள் பணம் தராவிட்டால் சிறைக்குச் செல்லத் தயார்

### மைத்திரி அதிரடி அறிவிப்பு



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பில் நீதிமன்றம் வழங்கியுள்ளதீர்ப்பின்படிதம்மால் 10 கோடி ரூபாவை ☞2

# கூட்டமைப்பின் தலைவர் இப்போதும் சம்பந்தனே ஊடக அறிக்கையால் அவரை நீக்கிவிட முடியாது

### சி.வீ.கே.சிவஞானம் சீற்றம்



ஊடக அறிக்கை மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனின் பதவி வறிதாக்கப்பட்டுள்ளது என யாரும் கூற முடியாது. சம்பந்தனே கூட்டமைப்பின் தலைவராகத் தற்போதும் பதவி வவிக்கின்றார்.

– இவ்வாறு வடக்கு மாகாண சபையின் அவைத் தலைவரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மூத்த துணைத் தலைவருமான சி.வி.கே. சிவஞானம் தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தில் இன்று தனது அலுவலகத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:–

கடந்த சில நாட்களாகத் தமிழ்த் தேசியக் ☞2

# மக்கள் புரட்சி வெடிக்கும்!



### ஜே.வி.பி. எச்சரிக்கை

**உள்ளூராட்சி சபைத் தேர்தல் பிற்போடப்படுமானால் மக்கள் புரட்சியின் இரண்டாவது அலை உருவாகும் - என்று எச்சரிக்கை விடுத்துள்ளார் தேசிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத்.** ☞2

## கிளிநொச்சியிலிருந்து ஐவர் தமிழ்நாட்டில் இன்று தஞ்சம்



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஜன்.23

இலங்கையிலிருந்து நீண்ட நாள்கள் இடைவெளியின் பின்பு இன்று ஐவர் தமிழ்நாட்டிற்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

கிளிநொச்சி பாரதிபுரத்தைச் சேர்ந்த ஐவர் நேற்று இரவு 10 மணிக்குப் ☞2

## தேர்தலில் ராஜபக்ஷவினருக்கு சிறந்த பாடம் புகட்டுவர் மக்கள்

### சம்பிக்க விளாசல்



பின்வாசல் வழியாக அரசின் ஆட்சியை முன்னெடுக்கும் ராஜபக்ஷவினருக்கு இம்முறை உள்ளூராட்சி சபைத் தேர்தலில் மறக்க முடியாத பாடத்தை மக்கள் புகட்டுவார்கள்.

-இவ்வாறு 43 ஆவது படையணியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான பாட்டலி சம்பிக்க ரணவக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில் –

தேர்தல் தொடர்பில் அச்சம் கொண்டுள்ள அரசு, அதனை ஒத்திவைக்கப் பல்வேறு வழிமுறைகளைக் ☞2

## காரைதீவில் 11 இடங்களுக்கு 196 வேட்பாளர்கள் போட்டி

### வாக்குகளைச் சிதறடிக்கும் நோக்கம் என்கிறார் தவிசாளர்

(வி.ரி. சகாதேவராஜா)

காரைதீவு பிரதேச சபையில் 11 உறுப்பினர்களுக்காக 196 வேட்பாளர்கள் களமிறங்கி உள்ளனர். இங்கு வாக்குகளை சிதறடித்து எமது இருப்பை கபளீகரம் செய்யவே சதி செய்கின்றனர்.எனவே மக்கள் நிதானமாகச் சிந்தித்து தமிழ் தேசியத்துடன் பயணிக்கவேண்டும்.

இவ்வாறு காரைதீவு பிரதேச சபை தவிசாளரும், இலங்கை தமிழரசுக் கட்சியின் காரைதீவு பிரதேச சபை வேட்பாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தெரிவித்தார்.

அம்பாறையில் செய்தியாளர்களைச் சந்தித்த அவர் மேலும் தெரிவித்ததாவது:

சமகால தேர்தல் முறைமை காரணமாக தமிழரசுக் கட்சி தனித்துப் போட்டியிடுகின்றது. ஆனால், காரைதீவில் இம்முறை ☞2

## உள்ளூராட்சித் தேர்தல் மூலம் திருடர்களை விரட்ட முடியாது!

### இராஜாங்க அமைச்சர் கருத்து



உள்ளூராட்சி சபைத் தேர்தலில் அரசைக் கவிழ்க்கவோ அரசில் உள்ள திருடர்களை விரட்டவோ முடியாது

என்று இராஜாங்க அமைச்சர் டி.பி. ஹேரத் தெரிவித்தார்.

உள்ளூராட்சி சபைத் தேர்தல் தொடர்பில் கருத்துக் ☞2

காலைக்கதிர் மாலைப்பதிப்பு



## கூட்டமைப்பின் தலைவர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூட்டமைப்பினதும் இலங்கைத் தமிழரசுக் கட்சியினதும் செயற்பாடுகள் தொடர்பான வேறுபட்ட கருத்துக்கள் ஊடகங்களில் செய்திகளாக வெளிவந்துள்ளன.

அவை பற்றி விமர்சனம் செய்ய நாங்கள் விரும்பவில்லை. ஆனால், இருந்தாலும்கூட நேற்றைய தினம் ரெலோவின் பேச்சாளர் எனச் சொல்லப்படுபவர், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் பதவியில் சம்பந்தன் தற்போது இல்லை எனவும், அந்தப் பதவி செயலற்றுப் போய்விட்டது எனவும், சம்பந்தனின் தலைவர் பதவி வறிதாக்கப்பட்டுள்ளது எனவும் ஊடகங்கள் முன்னிலையில் கூறியுள்ளார்.

கூட்டமைப்பிலிருந்து பிரதான பங்காளிக் கட்சியான தமிழரசுக் கட்சி இன்னமும் வெளியேறவில்லை. ஆனால், கூட்டமைப்பில் பங்காளிக் கட்சிகளாக இருந்த இரண்டு கட்சிகள் (ரெலோ, புளொட்) கூட்டமைப்பிலிருந்து வெளியேறி புதிய கூட்டணியை அமைத்துள்ளன. இந்த இரண்டு கட்சிகளும் (ரெலோ, புளொட்) காலகாலமாகக் கூட்டமைப்புடன் உரசப்பட்டுக் கொண்டிருந்தன. தற்போது உள்ளூராட்சி சபைத் தேர்தலையொட்டி அந்த இரண்டு கட்சியினரும் கூட்டமைப்பிலிருந்து வெளியேறிவிட்டார்கள். அது அவர்களுடைய உரிமை.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவராகவும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழுவின் தலைவராகவும் சம்பந்தனே தற்போதும் பதவி வகிக்கின்றார். அதுதான் உண்மை. ஊடக அறிக்கை மூலம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் பதவி வறிதாக்கப்பட்டுள்ளது எனக் கூற முடியாது.

விரும்பினால் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி அவரைப் பதவியிலிருந்து நீக்கலாம் அல்லது அவர் விரும்பினால் தாமாகவே பதவியிலிருந்து விலகலாம். அதைவிடுத்துக் கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனின் பதவி வறிதாக்கப்பட்டுள்ளது எனச் சொல்வது நீண்ட வரலாற்றைக் கொண்ட ஒரு தலைவரை அவமதிக்கின்ற ஒரு கூற்றாகும். அதை நான் கடுமையாக ஆட்சேபிக்கின்றேன் – என்றார்.

## காரைதீவில் 11 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மைதானத்தில் விளையாடுவது போன்று 14 அணிகள் சார்பில் 196 பேர் களத்தில் இறக்கப்பட்டுள்ளார்கள்.

எதற்காக இவ்வளவு பெரிய தொகையினர் இறக்கப்பட்டுள்ளார்கள் என்பதை சிந்திக்க வேண்டும். எமது இருப்பை இல்லாமல் செய்யும் நோக்கில் சதி நடக்கிறது.

மக்கள் துன்பப்பட்ட நேரத்தில் இவர்கள் எவரையும் காணவில்லை. கடந்த காலத்தில் மொட்டில் வந்தார்கள் யானையில் வந்தார்கள். மஹிந்த என்றார்கள் கோட்டா என்றார்கள். மக்களுக்கு ஆனது ஒன்றுமில்லை. ஆகவே, மக்களே போலியை கண்டு ஏமாறாதீர்கள். தேசியத்தோடு பயணியுங்கள். – என்றார்.

## கிளிநொச்சியிலிருந்து .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

புறப்பட்டு இன்று அதிகாலை 4 மணிக்கு தமிழ்நாட்டைச் சென்றடைந்துள்ளனர்.

ஆண், பெண் மற்றும் 3 சிறுவர்களே இராமேஸ்வரம் சேராங்கோட்டை கடற்கரையில் சென்று தரை இறங்கியுள்ளனர்.

அவர்களிடம் தமிழ்நாட்டுப் பொலிஸார் விசாரணை நடத்தினர். பின்பு மண்டபம் முகாமில் தங்க வைக்கப்பட்டனர்.

## தேர்தலில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கையாண்டு வருகின்றது. அரசின் இந்த முயற்சி இன்னும் முடியவில்லை.

எனினும், அரசு தேர்தலை நடத்தும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம். தேர்தலை நடத்துவற்குப் பணம் இல்லை என்பது எந்தவிதத்திலும் காரணமாக அமையாது.

அத்துடன் அண்மையில் நிறைவேற்றப்பட்ட தேர்தல் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்டம் பெரிய சிக்கலான சட்டம் இல்லை. குறுகிய காலத்தில் செலவுகளை ஒழுங்குபடுத்தும் சட்ட திட்டங்களைத் தேர்தல்கள் ஆணைக்குழுவால் வெளியிட வேண்டும்.

கடந்த ஆண்டு நாடு வங்குரோத்து அடைந்தது. இதையடுத்து கடந்த மே மாதம் 9 ஆம் திகதி ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை நாட்டு மக்கள் நேரடியான போராட்டத்தின் மூலம் அதிகாரத்தில் இருந்து இறக்கினர். ஜூலை 9 ஆம் திகதி கோட்டாபய ராஜபக்ஷவைப் பதவியில் இருந்து இறக்கினர்.

தற்போது இவர்கள் பின்வாசல் வழியாக வந்து உள்ளூராட்சி சபைகள், மாகாண சபைகளை ஆளுநர்கள் ஊடாகக் கட்டுப்படுத்துவதுடன் நாடாளுமன்றத்தையும் கட்டுப்படுத்தி வருகின்றனர்.

இம்முறை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்கும் ராஜபக்ஷவினருக்கும் மறக்க முடியாத பாடத்தை மக்கள் புகட்டுவர் – என்றார்.

## மக்கள் புரட்சி ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது:–

தேர்தல் என்பது மக்களுக்கான உரிமை. அதனை எவரும் தட்டிப் பறிக்க முடியாது. அவ்வாறு முற்பட்டால் மக்கள் நிச்சயம் வீதியில் இறங்குவார்கள். அது மக்கள் போராட்டத்தின் இரண்டாவது அலையாக அமையும்.

தேசிய மக்கள் சக்திக்கான வெற்றி வாய்ப்பு பிரகாசமாக உள்ளது. எமது கட்சியின் முக்கியஸ்தர்கள் பலர் இத்தேர்தலில் போட்டியிடுகின்றனர்.

இதன்படி மாத்தறை மாநகர சபைக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சுனில் ஹந்துன்நெத்தியும், கம்பஹா மாநகர சபைக்கு மஹிந்த ஜயசிங்கவும், அநுராதபுரம் நகர சபைக்கு முன்னாள் எம்.பி. வசந்த சமரசிங்கவும் போட்டியிடுகின்றனர். – என்றார்.

## காரைதீவில் 11 .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கூறும்போதே அவர் இவ்வாறு கூறினார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

உள்ளூராட்சி சபைத் தேர்தலில் ஊருக்கு – கிராமத்துக்கு வேலை செய்யக்கூடியவர்களைத்தான் மக்கள் தெரிவு செய்ய வேண்டும். வீதிகள் அமைப்பதற்கு – பாலங்கள் அமைப்பதற்குத் தலைமைத்துவம் வழங் கக்கூடியவர்களாக அவர்கள் இருக்க வேண்டும்.

இதற்காக வேலை செய்யக்கூடிய அனுபவம் உள்ளவர்களை வேட்பாளர்களாக நிறுத்தியிருக்க வேண்டும்.

திருடர்களை விரட்டுவதற்கும் அரசைக் கவிழ்ப்பதற்கும் நாம் ஒன்றிணைவோம் என்று கூறுகின்றது எதிர்க்கட்சி. அப்படி எதையும் செய்ய முடியாது. அதற்காக அடுத்த பொதுத் தேர்தல் வரும். அதில் பார்த்துக்கொள்ளலாம். உள்ளூராட்சி சபைத் தேர்தல் அதற்கான ஒன்றல்ல. ஊரில் சேவை செய்வதற்கான தேர்தலாகும்.

எல்லோரும் ஒன்றிணைந்து ஊரில் நன்கு வேலை செய்யக்கூடியவர்களைத் தெரிவு செய்வோம் – என்றார்.

## மக்கள் பணம் தராவிட்டால் .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவிதத்திலும் வழங்கமுடியாது என்றும், அந்தளவு பொருளாதாரப் பலம் தமக்குக் கிடையாது என்றும் மீண்டும் தெரிவித்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, மக்கள் பணம் தராவிட்டால் தான் சிறைக்குச் செல்லத் தயார் என்றும் அறிவித்தார்.

அவர் மேலும் கூறுகையில் –

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் தொடர்பான வழக்கின் தீர்ப்பில் 10 கோடி ரூபாவை செலுத்துமாறு உயர் நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்துள்ளது. எந்த விதத்திலும் எனக்கு 10 கோடி ரூபாவை வழங்கக்கூடிய பொருளாதார பின்புலம் கிடையாது. மக்கள் அதனைத் திரட்டித் தருவர் என்றே நான் எதிர்பார்க்கின்றேன்.

நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கும் சென்று பணத்தைத் திரட்டுவதற்கு என்னிடம் மோட்டார் சைக்கிள் ஒன்றுகூட கிடையாது. அவ்வாறு பணம் கிடைக் காவிட்டால் நான் சிறைக்குச் செல்வேன் – என்றார்.

விளம்பரத் தொடர்புகளுக்கு –
தொலைபேசி இலக்கம்
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com இணையம் - onlinekathir.com


## ஆரோக்கியமானது அல்ல!

**உள்ளூராட்சி தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் முடிந்து வாக்களிப்புத் திகதியும் அறிவிக்கப்பட்டாயிற்று. கட்சிகள், சுயேச்சைகள் என்று ஏராளமான அணிகள் இந்தத் தேர்தலில் களம் குதித்துள்ளன. அது வரவேற்கப்படவேண்டியது தான். அதேநேரத்தில் முக்கியமான பல சபைகளில் தமது முதன்மை வேட்பாளர் யார் என்பதை அறிவிப்பதற்குக் கட்சிகள் தயக்கம் காட்டி வருவது ஏன்?**

**உள்ளூராட்சி சபைத் தேர்திலில் முதன்மை வேட்பாளரை முன்கூட்டியே அறிவிக்கவேண்டிய அவசியம் ஏதுமில்லை. தேர்தலில் வெற்றி பெற்றவர்கள் மத்தியிலிருந்து ஒருவரை மாநகர சபைகளின் முதல்வராகவோ சபைகளின் தவிசாளர்களாகவோ அறிவித்துக்கொள்ளலாம். அது சட்டப்படி சரியானதும்கூட. ஆனால், தாம் ஆதரிக்கும் கட்சி ஒருவேளை வெற்றிபெற்றுவிட்டால் சபையை நிர்வகிக்கப்போகும் நபர் யார் என்பதைத் தெரிந்துகொள்ள மக்களுக்கு எல்லா உரிமைகளும் இருக்கின்றன. இன்னும் சொல்லப்போனால் தமது சபை நிர்வாகியை அறிவதன் மூலம் எந்தக் கட்சிக்கு வாக்களிப்பது என்பதை அவர்கள் தீர்மானிப்பதும்கூட நடக்கக்கூடியதுதான்.**


**அப்படியிருக்க தமது முதன்மை வேட்பாளர்களை அறிவிப்பதற்குக் கட்சிகள் பின்னடிப்பதும் அவற்றுக்கு உண்மையை எதிர்கொள்ளும் திராணி இல்லை என்பதையே காட்டுகின்றது. இது எந்தவொரு கட்சியையும் தனிப்படக் குறிப்பிடும் கருத்து அல்ல. அனேகமாக எல்லாக் கட்சிகளிலுமே இதுதான் நிலைமை. கொழும்பு மாநகர சபை போன்ற ஒரிரு சபைகளைத் தவிர வேறு எங்கும் பெரியளவில் முதன்மை வேட்பாளர்கள் எனக் குறிப்பிடப்படுபவர்கள் யாரும் இலர்.**

**யாராவது ஒருவரை முதன்மை வேட்பாளர் என்று நிறுத்தி அவர் வட்டாரத்தில் தோற்றுவிட்டால்பின்னர் என்ன செய்வது என்பது கட்சிகளின் வாதம். இது ஒரு சமாளிப்பு வாதமே தவிர வேறில்லை. அப்படி அந்த நபர் தோற்றுப்போகும் நிலையில் அவரை விடுத்து மற்றொருவரை முதல்வராகவோ தவிசாளராகவோ தெரிவு செய்துகொள்ள முடியும். அதற்காக தமது பகுதியை நிர்வகிக்கப்போகும் நபரை தேர்தலுக்கு முன்பே மக்கள் அறிந்துகொள்ளும் உரிமையை மறுப்பது ஏற்புடையதல்ல.**

**தேர்தலில் தமது கட்சி வெற்றி பெறும் என்கிற நம்பிக்கை இல்லாத நிலையில் அல்லது தாம் முதன்மை வேட்பாளர் என்று குறிப்பிட்டு நிறுத்தும் நபர் வெற்றி பெறுவார் என்கிற நம்பிக்கை இல்லாத நிலையில்தான் கட்சிகள் இந்த முடிவுக்குச் செல்கின்றன என்றே கருத வேண்டியுள்ளது. இது ஆரோக்கியமான தேர்தல் நடைமுறையும் அல்ல.**

# மு.காவிலிருந்து தாவியோர் மீளவும் வந்து இணையலாம்

## ஹக்கீம் அழைப்பு



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவர் என்ற வகையில் யாரையும் கட்சியிலிருந்து நானாக விரட்டியது கிடையாது.

– இவ்வாறு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமானரவூப்ஹக்கீம் தெரிவித்தார்.

முன்னாள் கிழக்கு மாகாண ஆளுநர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லாஹ்வை கட்சியில் இணைத்துக்கொண்டதுபோன்று முன்னாள் இராஜாங்க அமைச்சர் எம்.எஸ்.எஸ்.அமீர் அலியை இணைத்துக்கொள்வீர்களா என்று ஓட்டமாவடி பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எஸ்.ஐ.முஹாஜிரீன் கேட்டதற்கே ரவூப் ஹக்கீம் மேற்கண்டவாறு பதிலளித்தார்.

அவர் மேலும் கூறுகையில்,

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸை தாய்வீடாகக் கருதும் யாருக்கும் இந்தக் கதவு திறந்திருக்கும். அதில் எந்தச் சந்தேகமும் கிடையாது.

ஆனால், அவர்கள் இணைய விரும்புகின்ற போது இந்தக் கட்சியின் பாரம்பரியத்துக்கமைய, கட்சியில் இருக்கும் அனைத்து முக்கியஸ்தர்களுடனும் கலந்துரையாடியதன் இறுதியில் சாத்தியமான முடிவை எடுக்கலாம்.

எதிர்காலத்தில் கட்சியில் யாரும் இணைய விரும்பினால், அது தொடர்பாக பரிசீலித்து இணைக்கப்படுவார்கள் –என்றார்

# முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கத்தாரின் சிலை திறப்பு



யாழ்ப்பாணம் – உடுவில் மற்றும் மானிப்பாய் தொகுதியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் அமரர் விஸ்வநாதர் தர்மலிங்கத்தின் திருவுருவச் சிலை திறப்பு விழா இன்று வலிகாமம் தெற்கு பிரதேச சபை முன்பாக நடைபெற்றது.

நிகழ்வில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் போராசிரியர் சி.சிறிசற்குணராஜா பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு திருவுருவச் சிலையைத் திரைநீக்கம் செய்துவைத்தார்.

இந்த நிகழ்வில் நாடாளுமன்ற உறுப்பினர் தர்மலிங்கம் சித்தார்த்தன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர்களான சுரேஷ் பிரேமச்சந்திரன், எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் தெல்லிப்பளை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானத்தின் தலைவர் கலாநிதி ஆறுதிருமுருகன், முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் பா.கஜதீபன், பிரதேச சபையின் தவிசாளர்கள், பிரதேச சபை உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

# யாழில் கட்டுப்பணம் செலுத்திய சுயேச்சை குழு வேட்பு மனுவைத் தாக்கல் செய்யவில்லையாம்!

யாழ்.மாநகர சபையில் மட்டும் போட்டியிடுவதற்காக கட்டுப்பணத்தைச்செலுத்திய சுயேச்சை குழு ஒன்று வேட்பு மனு தாக்கல் செய்ய வராத சம்பவம் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றுள்ளது.

யாழ்.மாவட்டத்தில் உள்ள 17 உள்ளூராட்சி மன்றங்களுக்கான வேட்பு மனுத் தாக்கல் சனிக்கிழமை நண்பகல் 12 மணியுடன் நிறைவடைந்தது.

அதன்பின் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கருத்து தெரிவித்த யாழ் மாவட்ட தெரிவித்தாட்சி அலுவலர், ’7 அரசியல் கட்சிகளின் வேட்பு மனுக்கள் சில உள்ளூராட்சி மன்றங்களில் நிராகரிக்கப்பட்டுள்ளன.

இந்நிலையில், 16 சுயேச்சை குழுக்கள் கட்டுப்பணத்தைச் செலுத்திய நிலையில் 15 சுயேச்சைக் குழுக்கள் மட்டும் வேட்பு மனு தாக்கல் செய்துள்ளன.

ஒருசுயேச்சைக்குழுகட்டுப்பனத்தை செலுத்தி விட்டு வேட்பு மனுத் தாக்கல் செய்ய வரவில்லை.’என கூறியுள்ளார்.



## சீன புத்தாண்டு கொண்டாட்டத்தில் சூடு அமெரிக்காவில் 9 பேர் பரிதாப இறப்பு

அமெரிக்காவின் கலிஃபோர்னியா மாகாணத்தில் சீன புத்தாண்டு கொண்டாட்டத்தில் நிகழ்ந்த துப்பாக்கிச்சூட்டில் 9 பேர் உயிரிழந்துள்ளனர். துப்பாக்கிச் சூடு நடத்தியவர் தன்னைத்தானே சுட்டுக்கொண்டு இறந்து போனார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கலிஃபோர்னியா மாகாணத்தின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு 16 கிலோ மீற்றர் தொலைவில் உள்ள மான்டெரி பார்க் நகரில் இந்த துப்பாக்கிச் சூடு நடந்துள்ளது.

கார்வே அவென்யூ பகுதியில் செங் வான் சோய் என்ற சீன வம்சாவளி தொழிலதிபருக்கு சொந்தமான உல்லாச விடுதி செயல்படுகிறது. அங்கு ஞாயிற்றுக் கிழமை இரவு (அமெரிக்காவில் சனிக்கிழமை) இரவு சீன புத்தாண்டு தினம் கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. இதில் 10,000க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

அப்போது மர்ம நபர் ஒருவர், அதிநவீன துப்பாக்கியுடன் நுழைந்து கண் மூடித்தனமாகச் சுட்டார். இதில் 10 பேர் உயிரிழந்தனர். பலர் படுகாயம் அடைந்தனர்.

**அமெரிக்காவில் சீன நகரம்**

லாஸ் ஏஞ்சல்ஸ் அருகே 11 கி.மீ. தொலைவில் மாண்ட்ரே பார்க் அமைந்துள்ளது. நகரில் 61,000க்கும் மேற்பட்ட மக்கள் வசிக்கின்றனர். அவர்களில் 65 சதவீதம் பேர் சீன வம்சாவளியை சேர்ந்தவர்கள் ஆவர். இதனால் ஆண்டுதோறும் சீன புத்தாண்டு மாண்ட்ரே நகரில் கோலாகலமாகக் கொண்டாடப்படுவது வழக்கம்.

இந்த ஆண்டும் நகரின் அனைத்து ஓட்டல்கள், கேளிக்கை விடுதிகளில் சீன புத்தாண்டு உற்சாகமாகக் கொண்டாடப்பட்டது. இதில் கார்வே அவென்யூ பகுதி ஓட்டலில் இனவெறியின் காரணமாக சீனர்களை குறிவைத்து தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது. கடந்தாண்டு சீன புத்தாண்டு கொண்டாட்டத்தின்போதும் மாண்ட்ரே பார்க் பகுதியில் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டது.

தாக்குதல் நடத்தப்பட்ட விடுதி உரிமையாளர் செங் வான் சோய் தாக்குதல் குறித்துத் தெரிவித்ததாவது: சீன புத்தாண்டை ஒட்டி எங்கள் விடுதியில் 2 நாட்கள் இரவில் ஆடல், பாடல் நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டன. சம்பவத்தன்று இரவு நடனம் ஆடும் விடுதியில் மர்ம நபர் புகுந்து துப்பாக்கியால் சுட்டுள்ளார். அப்போது பாப் பாடல் சப்தம் அதிகமாக இருந்ததால் துப்பாக்கிச் சூடு சத்தம் கேட்கவில்லை. சில நிமிடங்களுக்கு பிறகே விபரீதம் புரிந்து அங்கிருந்தவர்கள் தப்பியோடினர். உடனடியாக ஊழியர்கள் எங்களது முக்கிய அறைகளின் கதவுகளை மூடினர். இதனால் துப்பாக்கிச் சூடு நடத்திய மர்ம நபரால் முன்னேறி வரமுடியவில்லை –என்றார். அமெரிக்காவில் இனவெறி தாக்குதலுக்கு முற்றுப் புள்ளி வைக்கப்பட வேண்டும் என்று மாண்ட்ரே நகர மக்கள் தெரிவித்தனர்.

இதேவேளை, துப்பாக்கிச் சூட்டில் ஈடுபட்ட சந்தேக நபர் தற்கொலை செய்துகொண்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர். இது குறித்து லாஸ் ஏஞ்சல்ஸ் கவுன்ட்டி ஷெரீப் ராபர்ட் லூனா தெரிவித்ததாவது:

நிகழ்விடத்திலிருந்து சற்றுத் தொலைவில் ஒரு சந்தேகத்துக்கு இடமான வாகனம் நின்றது. அந்த வாகனத்தை நாங்கள் சுற்றிவளைக்க முற்பட்டோம். அப்போது அந்த வேனிலிருந்து துப்பாக்கி குண்டு சத்தம் கேட்டது. வாகனத்தைத் திறந்து பார்த்தபோது அங்கு ஒரு நபர் இறந்து கிடந்தார். அவர் 72 வயதான ஹூ கான் ட்ரான் என்று அடையாளம் காணப்பட்டுள்ளது. அவர் தான் கார்வே அவென்யூவில் துப்பாக்கிச் சூடு நடத்தியிருக்க வேண்டும் என்று நம்புகிறோம். இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தின் பின்னணி என்னவென்று எங்களுக்குத் தெரியவில்லை. இது குறித்து தீவிர விசாரணை நடந்து வருகிறது என்றார்.

# 22 மாவட்டங்களில் இன்று பாகிஸ்தானில் மின் தடை



பாகிஸ்தானில் ஒரே நேரத்தில் 22 மாவட்டங்களில் பல மணி நேர மின் தடை ஏற்பட்டது. இதனால், பொதுமக்கள் பெரும் இன்னல்களுக்கு உள்ளாகினர்.

மின் தடை குறித்து பாகிஸ்தான் எரிசக்தி துறை அமைச்சகம் தனது ட்விட்டர் பக்கத்தில், பவர் க்ரிட்டில் இன்று காலை ஏற்பட்ட அலைவரிசை சரிவினா லேயே பரவலாக மின் தடை ஏற்பட்டுள்ளது என்று விளக்கமளித்துள்ளது.

ஆனால், அதற்கு முன்னதாகவே, குவெட்டா எலக்ட்ரிக் சப்ளை கம்பெனி உள்ளிட்ட பல்வேறு மின் பகிர்மான நிறுவனங்களும் மின் தடை பற்றி ட்விட்டரில் தகவல் தெரிவித்தன. குவெட்டா எலக்ட்ரிக் சப்ளை கம்பெனி தனது ட்விட்டர் பக்கத்தில் குட்டு நகர் முதல் குவெட்டா நகர் வரையிலான இரண்டு மின் கடத்திகளில் மின் விநியோகம் தடைபட்டது. இதனால் பலுசிஸ்தானின் 22 மாவட்டங்களில் மின் விநியோகம் தடைபட்டது. லாகூர், கராச்சியிலும் பல்வேறு பகுதிகளில் பரவலாக மின் தடை ஏற்பட்டுள்ளது என்று தெரிவித்துள்ளது. இஸ்லாமாபாத்தில் மட்டும் 117 பவர் கிரிடுகள் மின் விநியோகம் இல்லாமல் முடங்கியுள்ளது. பொவர் நகரும் மின் வெட்டால் பாதிக்கப்பட்டுள்ளது.

2021-இல் தெற்கு பாகிஸ்தானின் சிந்து மாகாணத்தில் ஒரு பவர் க்ரிடில் ஏற்பட்ட தொழில்நுட்பக் கோளாறு காரணமாக மிகப்பெரிய அளவில் மின் விநியோகம் பாதிக்கப்பட்டது. அதன் பின்னர் பாகிஸ்தானில் இப்போதுதான் இவ்வளவு பெரிய அளவிலான மின்தடை ஏற்பட்டுள்ளது என்று தெரிகிறது.

பாகிஸ்தானில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக அங்கு மக்கள் கடுமையான இன்னல்களை சந்தித்து வருகின்றனர். உணவுப் பொருள் தட்டுப்பாடு தொடர்ந்து அதிகரித்து வருவதால் அதற்கேற்ப விலையும் தொடர்ந்து உயர்ந்து வருகிறது.

விலைவாசி தொடர்ந்து உயர்ந்து வருவதால் மக்களின் வாழ்க்கைத் தரம் சரிந்து கொண்டே வருகிறது.

பாகிஸ்தானின் பஞ்சாப், சிந்து, பலுசிஸ்தான், கைபவர் பக்துன்வா என எல்லா மாகாணங்களிலும் மக்கள் பசியால் வாடும் மக்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் கூடிக் கொண்டே செல்கிறது. இதனால், பொது இடங்களில் விநியோகிக்கப்படும் இலவச உணவுகளைப் பெறுவதற்காக மக்கள் ஒருவரை ஒருவர் அடித்துக் கொள்ளும் நிகழ்வுகள் அரங்கேறிக்கொண்டிருக்கின்றன.

# இந்தியக் கடற்படையில் புதிய நீர்மூழ்கி இணைப்பு

இந்திய கடற்படை புதிய நீர்மூழ்கி கப்பல் இணைக்கப்பட்டுள்ளது. புதிய கப்பலுக்கு ஐஎன்எஸ் 'வகிர்' எனப் பெயரிடப்பட்டுள்ளது.

திங்கள்கிழமை கடற்படையில் சேர்க்கப்பட்ட ஐஎன்எஸ் 'வகிர்' பிரான்ஸ் நாட்டின் தொழில்நுட்ப பரிமாற்றங்களுடன், இந்தியாவிலுள்ள மஸகான் டோக் கப்பல் கட்டுமான நிறுவனத்தில் உருவாக்கப்பட்டது.

இன்று நடைபெற்ற விழாவில், கடற்படை தலைவர் ஆர்.ஹரிகுமார் முன்னிலையில் கடற்படையில் வகிர் இணைக்கப்பட்டது.

இதுகுறித்து இந்திய கடற்படை வெளியிட்டுள்ள தகவலில், 'இந்த நீர்மூழ்கி கப்பல், இந்தியாவின் கடல்சார் நலன்களை மேம்படுத்துவது, எதிரிகளைத் தடுப்பது, புலனாய்வு செய்வது, நெருக்கடி காலங்களில் கண்காணிப்பு மற்றும் ஆய்வுப் பணிகளில் ஈடுபடுவது என்று இந்திய கடற்படையின் ஆற்றலை வலுப்படுத்தும் என்று குறிப்பிட்டுள்ளது.

வகிர் என்பதற்கு மணல் சுறா என்று பொருள். இது இரகசியமான செயல்பாடு மற்றும் அச்சமின்மையைக் குறிக்கும். இந்த இரண்டு அம்சங்களும் வகிர் கப்பலுக்கும் அப்படியே பொருந்தும்.

உலகின் சிறந்த சென்சார்கள் நீர்மூழ்கியில் பொருத்தப்பட்டுள்ளன. இதன் ஆயுதங்களில் கம்பிவழிதுண்டப்படும் டோர்பிடோக்கள், பெரிய எதிரி படையை நீர்மூலமாக்கும் அளவில் நீர்பரப்பில் இருந்து நிலத்திற்கு ஏவக்கூடிய ஏவுகணைகள் என்பனவும் சேர்க்கப்பட்டுள்ளன.

அதேபோல் சிறப்பு செயல்பாடுகளுக்கான கடற்படை கமாண்டோக்களையும் இந்த நீர்மூழ்கி கப்பல் கொண்டுள்ளது.

அதேநேரத்தில், இதன் சக்தி வாய்ந்த டீசல் என்ஜின் மூலம் இரகசிய செயல்பாடுகளுக்காக பேட்டரிகளை விரைவாக சார்ஜ் செய்ய முடியும்' என்று கூறப்பட்டுள்ளது.

ஐஎன்எஸ் வகிர் நீர்மூழ்கி 67.5 மீற்றர் நீளம், 6.2 மீற்றர் அகலம், 12.3 மீற்றர் உயரம் கொண்டதாகும். இது டீசல்-மின்சாரத்தில் இயங்கும். எதிரி போர்க் கப்பல்களை அழிக்கும் அதிநவீன ஏவுகணைகள் நீர்மூழ்கியில் பொருத்தப்பட்டுள்ளன. கடல் பகுதி மட்டுமின்றி வான் பகுதி, நிலப்பகுதிகளை குறிவைத்தும் தாக்குதல் நடத்த முடியும்.

இது கடலுக்கு அடியில் 350 மீற்றர் ஆழம் வரை மூழ்கும். சுமார் 2 வாரங்கள் வரையில் இதனால் கடலுக்கு அடியில் தொடர்ந்து தங்கியிருக்க முடியும். இது அதிக சப்தம் எழுப்பாது என்பதால் எதிரிகளின் கடல் எல்லைக்குள் நுழைந்தாலும் எளிதில் கண்டறிய முடியாது.

இந்திய கடற்படையில் தற்போது 150க்கும் மேற்பட்ட போர்க் கப்பல்கள் உள்ளன. வரும் 2027ம் ஆண்டுக்குள் போர்க்கப்பல்களின் எண்ணிக்கையை 200 ஆக உயர்த்த மத்திய பாதுகாப்புத் துறை இலக்கு நிர்ணயித்திருக்கிறது.

அதேபோல் கடற்படையில் 17 நீர்மூழ்கி கப்பல்கள் உள்ளன. இதில் 2 நீர்மூழ்கி கப்பல்கள் அணு ஆயுத தாக்குதல் நடத்தும் திறன் கொண்டவை. நாட்டின் பெரும்பாலான நீர்மூழ்கி கப்பல்கள் ரஷ்யா, ஜெர்மனி தயாரிப்புகள்.

# சீனாவில் ஒரே வாரத்தில் 13,000 பேர் உயிரிழப்பு

சீனாவில் கொரோனா தொற்று வேகமாகப் பரவி வருகிறது. அதுமட்டுமல்லாமல் கொரோனா உயிரிழப்புகளும் அதிகரித்து வருகின்றன என்று அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஒரே வாரத்தில் 13 ஆயிரம் பேர் கொரோனாவால் உயிரிழந்ததாக அந்நாட்டு சுகாதார அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார் எனவும், அவரின் கூற்றின்படி ஜனவரி 13 முதல் ஜனவரி 19 வரையிலான காலகட்டத்தில் இந்த உயிரிழப்புகள் நிகழ்ந்துள்ளதாககவும் சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன..

ஜனவரி 12 ஆம் திகதி வரை 60 ஆயிரம் பேர் கொரோனாவால் உயிரிழந்தனர் என்று சீன அரசு ஏற்கனவே தெரிவித்திருந்தது.

இந்நிலையில் சீனாவின் நோய்த் தடுப்பு மற்றும் கட்டுப்பாட்டு மையம் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில்,கொரோனா தொற்று காரணமாக நேற்று மட்டும் 681 பேர் உயிரிழந்துள்ளனர் என்றும் கொரோனா தொற்றுடன் வேறு நோய்கள் இருந்ததால் 11 ஆயிரத்து 977 பேர் இறந்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சீன அரசு தொற்று பரவல், உயிரிழப்புகள், மரபணு பகுப்பாய்வு முடிவுகள் குறித்து உறுதியான அதிகாரபூர்வமான தகவலை அளிக்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் வலியுறுத்தி வருகிறது.

# கட்டுப்பணம் செலுத்திய 18 வேட்புமனுக்கள் திருகோணமலையில் வந்து சேரவில்லை

எப்.முபாரக், ஜன 23

மார்ச் மாதம் 9ஆம் திகதி நடைபெறவுள்ள உள்ளூராட்சி சபைத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் உள்ள 13 உள்ளூர் அதிகார சபைகளுக்கும் போட்டியிட 162 வேட்புமனுக்கள் தகுதி பெற்றுள்ளன. 178 வேட்புமனுக்களுக்கான கட்டுப்பணம் செலுத்தப்பட்டிருந்தபோதும் இறுதி நேரத்தில் 16 வேட்புமனுக்கள் கையளிக்கப்படவில்லை என்று திருகோணமலை மாவட்ட உதவி தேர்தல்கள் ஆணையாளரும் மாவட்ட உள்ளூர் அதிகார சபைகளுக்கான தெரிவத்தாட்சி அலுவலருமான ஆர். சசீலன் தெரிவித்தார்.

தாக்கல் செய்யப்பட்ட வேட்பு மனுக்களுள் 7 அரசியல் கட்சிகள் மற்றும் சுயேட்சை குழுவொன்றின் வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டுள்ளன.

திருகோணமலை மாநகர சபைக்கு அங்கீகரிக்கப்பட்ட 15 அரசியல் கட்சிகள், 4 சுயேச்சைக் குழுக்கள் வேட்பு மனுக்களை தாக்கல் செய்திருந்தன. இவற்றுள் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் வேட்பு மனு உரிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை இன்மையாலும் ரூபராஜ் ஜனோஜ் தலைமையிலான சுயேச்சைக் குழுவின் வேட்புமனு உரிய நேரத்திற்கு சமர்ப்பிக்காமை காரணமாகவும் நிராகரிக்கப்பட்டன.

மேலும் தமிழர் விடுதலை கூட்டணி வேட்பாளர் மிஹ்ராப் இவாத் அகமட் சத்தியப் பிரமான உறுதியுரை வழங்காமையாலும் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி வேட்பாளர்களான நேசதுரை சங்கிர்த்தா, ஜெகநாதன் நவதீசன் ஆகியோர் முழுமையற்ற சத்தியப்பிரமாண உறுதியுரையை வழங்கியமையாலும் அவர்களின் வேட்பாளர் அந்தஸ்த்து நிராகரிக்கப்பட்டன. இதன்படி திருகோணமலை மாநகர சபைக்கு மொத்தமாக 473 வேட்பாளர்கள் களமிறங்கவுள்ளனர்.

கிண்ணியா நகர சபைக்காக 13 அரசியல் கட்சிகள் மாத்திரம் வேட்புமனுக்களை தாக்கல் செய்தன. இவற்றுள் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணி தாக்கல் செய்த வேட்புமனு உரிய பெண் வேட்பாளர் இன்மை காரணமாக நிராகரிக்கப்பட்டது. இங்கு போட்டியிடும் மொத்த வேட்பாளர்களின் எண்ணிக்கை 192 ஆகும்.

வெருகல் பிரதேச சபைக்காக 13 அரசியல் கட்சிகள் வேட்புமனுக்களை சமர்ப்பித்தன. இச்சபைக்கு வேட்பு மனுக்களை தாக்கல் செய்த அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் வேட்பாளர் அப்துல்லா அஸீராவின் வேட்பாளர் அந்தஸ்த்து சத்தியப்பிரமாண உறுதியுரை இன்மை காரணமாக நிராகரிக்கப்பட்டது. இங்கு 207 வேட்பாளர்கள் களமிறங்குகின்றனர்.

சேருவல பிரதேச சபைக்கு 10 அரசியல் கட்சிகள் வேட்புமனுக்களை தாக்கல் செய்திருந்தன. இதில் இலங்கை தமிழரசுக்கட்சி தாக்கல் செய்த வேட்புமனு உரிய பெண் வேட்பாளர் இன்மை காரணமாக நிராகரிக்கப்பட்டன. இங்கு 171 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

கந்தளாய் பிரதேச சபைக்கு 13 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டிருந்தன. இதனுள் இரண்டு சுயேட்சைக்குழுக்களும்உள்ளடங்கும்.இச்சபைக்காக வேட்புமனு தாக்கல் செய்த அகில இலங்கை மக்கள் காங்கிரசின் வேட்புமனு உரிய பெண் வேட்பாளர்களின் எண்ணிக்கை இன்மை காரணமாகவும் சுதந்திர ஐக்கிய முன்னணியின் வேட்புமனு வேட்பாளர்களின் எண்ணிக்கை பூரணப்படுத்தப்படாமை காரணமாகவும் நிராகரிக்கப்பட்டன. இச்சபைக்கு264வேட்பாளர்கள்போட்டியிடுகின்றனர்.

மொரவெவ பிரதேச சபைக்கு 07 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இங்கு மொத்தம் 133 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர்.

கோமரங்கடவெல பிரதேச சபைக்கு 05 அரசியல் கட்சிகளின் வேட்புமனுக்களும் பதவிசிறீபுர பிரதேச சபைக்கு 07 அரசியல் கட்சிகளும் வேட்புமனுக்களை தாக்கல் செய்தன. இங்கு போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை முறையே 95, 133 ஆகும்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபைக்கு 16 அரசியல் கட்சிகளும் 05 சுயேட்சை குழுக்களும் வேட்பு மனுக்களை தாக்கல் செய்தன. இவற்றுள் ஜனநாயக தமிழ் தேசிய கூட்டணியின் வேட்புமனு வேட்புமனுவில் கட்சியின் பெயர் இடத்தில் குறிப்பிடப்படாமை காரணமாக நிராகரிக்கப்பட்டது. மேலும் தமிழர் சமூக ஜனநாயக கட்சியின் காளிராசா ராஜு மற்றும் சங்கித்தா மோகனதாசின் வேட்பாளர் அந்தஸ்த்து பூரணமற்ற சத்தியப்பிரமாணம் காரணமாக நிராகரிக்கப்பட்டது. இச்சபைக்காக 418 வேட்பாளர்கள் களமிறங்குகின்றனர்.

குச்சவெளி பிரதேச சபைக்காக 16 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன.இதில் இரண்டு சுயேட்சை குழுக்களும் அடங்கும். அகில இலங்கா தமிழ் காங்கிரசின் வேட்புமனு உரிய எண்ணிக்கையான வேட்பாளர் இன்மை காரணமாக நிராகரிக்கப்பட்டது. இங்கு போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 285 ஆகும்.

தம்பலகாமம் பிரதேச சபைக்காக 11 வேட்புமனுக்கள் அரசியல் கட்சிகளால் தாக்கல் செய்யப்பட்டன. இங்கு மொத்தம் 209 வேட்பாளர்கள் களமிறங்குகின்றனர்.

மூதூர் பிரதேச சபைக்கு 15 அரசியல் கட்சிகளும் 03சுயேட்சை குழுக்களும் உள்ளடங்கலாக 18 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இங்கு போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 456 ஆகும்.

கிண்ணியா பிரதேச சபைக்கு 09 வேட்புமனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. இச்சபைக்கு வேட்புமனு தாக்கல் செய்த ஐக்கிய தேசிய கட்சியின் வேட்பாளர் அன்சார் இஜாஸ் பூரணமற்ற சத்தியப்பிரமாணம் காரணமாக வேட்பாளர் பட்டியலில் அவரின் பெயர் நிராகரிக்கப்பட்டது. இங்கு போட்டியிடும் வேட்பாளர்களின் எண்ணிக்கை 143ஆகும். 13 உள்ளூராட்சி சபைகளுக்குமாக 3179 வேட்பாளர்கள் மொத்தமாக போட்டியிடுகின்றனர்.

## முஸ்லிம்கள் வாழும் சபைகளை முற்றாக மு.கா. கைப்பற்றும்

**பிரதிப் பொருளாளர் யஹியாகான் நம்பிக்கை**

*(செயிட் அஸ்லம்)*

*கிழக்கு மாகாணத்தில் முஸ்லிம்கள் பெரும்பான்மையாக வாழும் அனைத்து உள்ளூராட்சி சபைகளையும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸே கைப்பற்றும் என அக்கட்சியின் பிரதிப் பொருளாளர் ஏ.சி.யஹியாகான் தெரிவித்தார்.*

*வேட்புமனுத் தாக்கல் நிறைவுற்ற நிலையில், அவர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேலும் கூறியதாவது;*

*உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் திட்டமிட்டபடி நடைபெறுமாயின் மு.கா.வின் வெற்றி தவிர்க்க முடியாத ஒன்றாக மாறும். முஸ்லிம் காங்கிரஸ் தமது தாய்க் கட்சி, அந்தக் கட்சி மட்டும்தான் முஸ்லிம்களின் கட்சி என்பதை உணர்ந்த பலர் இன்று கட்சியோடு மீளிணைந்து வருகின்றனர்.*

*மு.கா தலைவர் ரவூப் ஹக்கீம் பல விட்டுக்கொடுப்புக்களுடன் கட்சியை பலப்படுத்தி வருகின்றார்.*

*முஸ்லிம்களின் கட்சி என்று தம்மைத்தாமே மார்தட்டிக் கொள்ளும் ஓரிரு கட்சிகள் இன்றைய சூழ்நிலையில் வலுவிழந்து உட்பூசல் அதிகரித்து, வேட்பாளர் இன்றி திணறிக் கொண்டிருக்கின்றன. இந்த நிலையில் அக்கட்சிகள் மீது, அக்கட்சிகளின் ஆதரவாளர்களே அதிருப்தியடைந்த நிலையில் காணப்படுகின்றனர். மு.கா மட்டுமே பூரணமாக வேட்பாளர்களை நியமித்து வேட்புமனுக்களையும் தாக்கல் செய்துள்ளது.*

*அம்பாறை மாவட்டத்தில் உள்ள அனைத்து முஸ்லிம் பெரும்பான்மை சபைகளையும் கைப்பற்றுவது மட்டுமன்றி மட்டக்களப்பு மற்றும் திருகோணமலை மாவட்டங்களிலும் இச்சாதனை நிலை நாட்டப்படும் என்பதை உறுதிப்படுத்துகிறேன்- என்றும் யஹியாகான் மேலும் தெரிவித்துள்ளார்.*

## திருக்கோவிலில் இரண்டு வேட்புமனுக்கள் நிராகரிப்பு

(வி.ரி. சகாதேவராஜா)

அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில் பிரதேச சபைக்கான தேர்தலுக்குத் தாக்கல் செய்யப்பட்ட 11 வேட்புமனுக்களில் 02 வேட்பு மனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

திருக்கோவில் பிரதேச சபைக்கு 10 கட்சிகளும், 1 சுயேச்சை அணியுமாக 11 வேட்புமனுக்கள் கையளிக்கப்பட்டன. அதில், ஈழ மக்கள் ஜனநாயக கட்சி மற்றும் ஐக்கிய தேசியக் கட்சி ஆகியவற்றின் 2 வேட்புமனுக்கள் நிராகரிக்கப்பட்டன.

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனுவில் குறைந்தபட்ச பெண் வேட்பாளர் தொகை இல்லாமையினால் நிராகரிக்கப்பட்டது. ஐக்கிய தேசியக் கட்சியினால் சமர்ப்பிக்கப்பட்ட வேட்பு மனு தாமதமாகக் கையளிக்கப்பட்ட காரணத்தினால் நிராகரிக்கப்பட்டது. தமிழ் மக்கள் விடுதலை புலிகள் கட்சி, ழ மக்கள் ஜனநாயக கட்சி, தமிழர் விடுதலை கூட்டணி, ஐக்கிய மக்கள் சக்தி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சி, இலங்கை தமிழரசுக் கட்சி, ஐக்கிய தேசியக் கட்சி, ஜனநாயக தமிழ் தேசியக்டணி, தேசிய ஜனநாயக முன்னணி, மற்றும் அருளானந்தம் ஜெயதரன் தலைமையிலானசுயேச்சைகுழுஆகியனபோட்டியிடவுள்ளன.

இதேவேளை, நாவிதன்வெளி பிரதேச சபைக்கான ஐ.தே.கட்சி வேட்புமனுவும் நிராகரிக்கப்பட்டது.



## கல்விச் சுற்றுலாவுக்கு புதிய நிபந்தனைகள்

பாடசாலை மாணவர்கள் கல்வி சுற்றுலா தொடர்பில் புதிய கட்டுப் பாடுகளை விதிக்க கல்வியமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

நாள் ஒன்றுக்கு மாணவர்களை சுற்றுலாவுக்கு அழைத்து செல் லக்கூடிய அதிகபட்ச தூரத்தை 100 கிலோ மீற்றராக வரையறுக்க கல்வியமைச்சு தீர்மானித்துள்ளது.

இதன்படி, கல்விச் சுற்றுலா வுக்கு அழைத்துச் செல்லப்படும் மாணவர்களை மாலை 6 மணிக்கு முன் அந்தந்த பாடசாலைகளுக்கு அழைத்து வர வேண்டும்.

எதிர்காலத்தில் பாடசாலை ம ாணவர்கள் மேற்கொள்ளும் கல்விப் பயணங்களுக்கு தெரிவு செய்யப் பட்ட பகுதிகள் தொடர்பிலும் அதிக கவனம் செலுத்தப்படவுள்ளது.

புதிய அறிவுறுத்தல்கள் அடங் கிய சுற்றறிக்கையை அனைத்து பாடசாலைகளுக்கும் கல்வி அதி காரிகளுக்கும் உடனடியாக வழங்க கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொழும்பு தேர்ஸ்டன் கல்லூரி மாணவர்களை ஏற்றிச் சென்ற பஸ் விபத்துக்குள்ளானதை அடுத்து இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள் ளது.



சுன்னாகம் பாரம்பரிய ரோட்டரிக் கழகத்தினால் கடந்த வியாழக்கிழமை யாழ்ப்பாணம்-கட்டுடைப் பகுதியைச் சேர்ந்த பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றிற்கு வாழ்வாதார மேம்பாட்டிற்காக தையல் இயந்திரம் வழங்கி வைக்கப்பட்டது. மலேசியா ரோட்டரிக் கழக அங்கத்தவர்களின் நிதிப் பங்களிப்பில் இந்த உதவி செய்யப்பட்டது.

## இடமாற்றங்கள் நிறுத்தி வைப்பு

நாட்டில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல் அறிவிக்கப்பட்டுள்ள நிலை யில், அரச சேவையில் இட மாற் றங்கள் செய்யப்பட முடியாது என தேசிய தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

ஆணைக்குழுவின் தலைவர் நிமால் புஞ்சிஹேவா இந்த விடயத்தை தெரிவித்தார்.

“மார்ச் மாதம் 9 ஆம் திகதி உள் ளூராட்சி மன்றத் தேர்தல் நடத்தப்பட உள்ளது. இந்த காலப் பகுதியில் இடமாற்றங்கள் செய்யப்பட வேண்டும ாயின் தேர்தல் ஆணைக்குழுவிற்கு அறிவித்து அதன் அனுமதியுடன் ம ட்டுமே இடமாற்றம் செய்ய முடியும். தேர்தல் தொடர்பில் சகல சட்ட நடவ டிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன. தேர்தல் முடியும் வரையில் இந்த சட்ட ஏற்பாடுகள் பின்பற்றப்படும்” எனக் குறிப்பிட்டுள்ளார்.

# தாய்க் கட்சியான தமிழ் அரசு பிரிந்ததை ஏற்க இயலவில்லை

### இப்படிச் சொல்கிறார் செல்வம்

தமிழ் அரசுக் கட்சி என்பது ஒரு தாய்க் கட்சி. அந்தக் கட்சி கூட்ட மைப்பிலிருந்து பிரியும்போது உணர்ந்துசெயற்பட்டிருக்கவேண்டும். சிறு தேர்தல் ஒன்றுக்காக அந்தக் கட்சி பிரிந்து சென்றதை என்னால் ஏற்க முடியவில்லை.

இவ்வாறு தெரிவித்துள்ளார் ரெலோ அமைப்பின் தலைவர் செல்வம் அடைக்கலநாதன். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித் ததாவது:

தமிழ் மக்களின் பிரச்சினை களுக்குத் தீர்வு பெற்றுத் தருவோம் என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மக்களுக்குப் பல உறுதிமொழிகளை வழங்கியது. மக்களும் கூட்டமைப்பு பிரச்சினைகளுக்கு தீர்வைப் பெற்றுக் கொடுக்கும் என்று நம்பி இருந்தார் கள். தற்போது கூட்டமைப்பே பிளவு பட்டு காணப்படுகிறது. இது மக்கள் மத்தியில் அதிருப்தியை ஏற்படுத் தியுள்ளது.

தமிழரசுக் கட்சி என்பது ஒரு தாய்க் கட்சியாகும். அந்தக் கட்சி இது தொடர் பில் உணர்ந்து செயற்பட்டிருக்க வேண்டும். மக்கள் எங்களை நம்பி யிருக்கிறார்கள். சிறு தேர்தலுக்காக அவர்கள் பிரிந்து செல்வதை என்னால் ஏற்றுக்கொள்ள முடியாது. மக்களின் நம்பிக்கையைத் தமிழ் அரசுக் கட்சி இல்லாது செய்துள்ளது. மக்களைப் புறக்கணித்து பிரிந்து செயற்படுவது தவறானதாகும்.

பிரிந்து போட்டியிடும்போது எங்க ளுக்குள் கருத்து முரண்பாடுகள் உரு வாகலாம். பரப்புரைக் கூட்டங்களில் வேட்பாளர்கள் கூட்டமைப்பை விமர் சித்துப் பேசலாம். இவ்வாறு நடக் கும்போது மக்கள் மேலும் அதிருப்தி யடைவார்கள். வெறுப்பு உருவாக்கும். அது மக்களின் கோபத்தைத் தூண்டும்.

இந்தத் தேர்தலில் வாக்கு கேட்டு செல்லும்போது சம்பந்தனையோ சுமந்திரனையோ விமர்சித்து வாக்கு களை கேட்கமாட்டோம். தனிப்பட்ட நபரை வைத்து அரசியலில் நடத்த வேண்டிய தேவை எமக்குக் கிடையாது.

ஒருவேளை தேர்தல் நிறுத்தப்பட் டால் எங்களுடைய நிலை என்ன? அதன் பின் ஏற்படக்கூடிய சிக்கல் களுக்கு எவ்வாறு முகங்கொடுப்பது என்பதைச் சிந்திக்கவில்லை. நாம் ஒற்றுமையாகப் பயணிப்பதன் மூலமே பிரச்சினைகளுக்குத் தீர்வைக் காணமுடியும். தமிழ் மக்கள் எதிர் நோக்கும் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுப்பதற்கு அனைவரும் ஒன்றிணைந்து பணியாற்ற வேண் டும் – என்றார்.

## பழங்குடியினருக்கு ஆங்கில மொழி கற்பிக்கும் பொலிஸார்!

தம்பனை பழங்குடியினகுழந்தை களுக்கு ஆங்கில மொழியை இலவசமாகக் கற்பிக்கும் திட்டத்தை பொலிஸார் தொடங்கியுள்ளனர்.

பழங்குடி இனத் தலைவர் உருவரிகே வன்னில பத்தனின் வேண்டுகோளுக்கு இணங்க தம்பனை சுற்றுலா பொலி ஸாரின் பங்களிப்பில் இந்த ஆங்கில கற்பித் தல் திட்டம் தொடங்கப் பட்டுள்ளது.

ஆதிவாசிகளை சந்திக்க வரும் சுற்றுலா வழிகாட்டிகளில் சிலர் தங் களுக்குச் சாதகமாக மொழி யைப் பயன்படுத்துவதால் ஆதிவாசிகள் ஆங்கிலம் கற்க முயற்சித்துள்ளனர் என பொலிஸார் குறிப்பிடுகின்றனர்.

## பொலிஸ் மா அதிபர் அறியாமல் சட்டத்தரணிகள் மீது வழக்கு!

### டிஐஜியிடம் விளக்கம் கோரப்பட்டது

பொலிஸ்மா அதிபர் மற்றும் பொலிஸ் சட்டப் பிரி வுக்கு தெரியாமல், சட்டத் தரணிகள் சிலருக்கு எதி ராக, கொழும்பு -வாழைத்தோட்டம் பொலிஸார், கொழும்பு பிரதான நீதி வான் நீதிமன்றில் முதல் தகவல் அறிக்கை (பீ அறிக்கை) சமர்ப் பித்து வழக்கொன்றைத் தொடுத் தமை தொடர்பில் மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேச பந்து தென்னக் கோனிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளது.

பொலிஸ்மா அதிபர் சந்தன விக்ரம ரத்ன இது தொடர்பில் தேசபந்து தென்ன கோனிடம் விளக் கம் கோரியுள்ளார் என பொலிஸ் ஊடகப் பேச்சா ளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சட்டத்தரணி நிஹால் தல்துவ குறிப்பிட்டுள்ளார்.

அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றிய ஏற்பாட்டாளர் வசந்த முத லிகே தொடர்புபட்ட பயங்க ரவாதத் தடைச் சட்டத்தின் கீழான வழக்கை, கொழும்பு மேலதிக நீதிவான் தரங்கா மஹவத்தவிடம் இருந்து மாற்ற சட்டமா அதிபர் எடுத்த நடவடிக்கை மற்றும் வழி முறைக்கு எதி ர்ப்பு வெளி யிட்டு சட்டத்தரணிகள் கடந்த 18 ஆம் திகதி கொழும்பு பிர தான நீதி வான் நீதிமன்ற கட்டடத் தொகுதி முன்பாக ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இது சட்டவிரோதச் செயல் என்று தெரிவித்து உள்ளூ ராட்சி மன்ற தேர்தல்கள் சட்டம் மற்றும் தேசிய சாலை கள் சட்டத்தின் கீழ் வாழைத் தோட்டம் பொலிஸார், கொழும்பு பிரதான நீத வானுக்கு சிரேஷ்ட சட்டத்தரணி குணரத்ன வன்னி நாயக்க, நுவன் போப்பகே, சேனக பெரேரா உள்ளிட் டோரின் பெயர் குறிப்பிட்டு பீ அறிக்கை தாக்கல் செய் துள்ளனர்.

எனினும் இவ்வாறு சட்டத்தரணிக ளுக்கு எதிரான நடவடிக்கை தொடர்பில் பொலிஸ்மா அதிபரோ பொலிஸ் சட்டப் பிரிவோ அறிந்திருக்கவில்லை என குறிப்பிட்ட பொலிஸ் ஊடகப் பேச்சாளர், அதன் அடிப்படையிலேயே மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோனிடம் விளக்கம் கோரப்பட்டுள்ளதாக தெரி வித்துள்ளார். வாழைத்தோட்ட பொலிஸாரின் நடவடிக்கை தொடர்பில் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்கு ழுவுக்கு ஏற்கனவே பொலிஸ்மா அதி பரிடம் அறிக்கை கோரியுள்ளமையும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.

## மைத்திரிக்கு 6 வீடுகள் சொந்தமாக உண்டாம்

முன்னாள் ஜனாதிபதி மைத்தி ரிபால சிறிசேனவுக்கு 6 சொகுசு வீடுகள் சொந்தமாக உள்ள நிலையில் நீதிமன்றம் செலுத்த உத்தரவிட்ட 10 கோடி ரூபாவைச் செலுத்தத் தன்னிடம் பணம் இல்லை என்று அவர் கூறுவது வேடிக்கையானது என்று

வடமத்திய மாகாண முன் னாள் முதலமைச்சர் பேச ஜயரத்ன தெரிவித்தார்.

மைத்திரிபால சிறிசேனவுக்கு மூன்று வீடுகள் உள்ளன எனவும் கொழும்பில் இரண்டு வீடுகளும் கம்பஹாவில் ஒரு வீடும் உள்ளதாகவும் அவர் கூறியுள் ளார்.

இந்த வீடுகள் அவரது சொந்தப் பெயரில் இல்லாவிட்டா லும், அவரது நண்பர்கள், உறவினர்கள் பெயரில் உள்ளன என ஜயரத்ன மேலும் குறிப்பிட் டார்.

ஈஸ்டர் குண்டுத் தாக்குதல்கள் தொடர்பில் தாக்கல் செய்யப் பட்ட மனித உரிமை வழக்கின் தீர்ப்பின் பிரகாரம் 10 கோடி ரூபா நட்டஈடு வழங்குமாறு முன்னாள் ஜனாதிபதிக்கு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## கெருடாவில் ஆலயத்தில் சாமி தாலி திருட்டு

சாவகச்சேரிப் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கெருடாவில் பகுதியில் உள்ள கந்தசுவாமி ஆலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு திருட்டு இடம்பெற்றிருப்பதாக சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. ஆலயத்தில் எழுந்தருளி இருந்த வள்ளி மற்றும் தெய்வானை ஆகியோரின் தாலி, ஆலய பயன்பாட்டிற்காக வைக்கப்பட்டிருந்த தேங்காய் எண்ணெய் மற்றும் பணம் ஆகியன திருடப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

பொலிஸார் தமக்குக் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# தேர்தலை விடுத்து மக்கள் வாழக்கூடிய நிம்மதியான சூழலை ஏற்படுத்தவேண்டும்!

## செஹான் சேமசிங்க இப்படிக் கூற்று

நாடு கடுமையான பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொத்திருக்கும் தற்போதைய சூழ்நிலையில் தேர்தல் நடத்தப்பட வேண்டுமா, இல்லையா? அல்லது பிற்போடப்பட வேண்டுமா என்பதை ஆராய்வதை விடுத்து அனைவரும் ஒன்றிணைந்து மக்கள் வாழக்கூடிய நிம்மதியான சூழலை உருவாக்குவதற்கு முயற்சிக்க வேண்டும் என்று நிதி இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க தெரிவித்தார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் தொடர்ந்தும் கூறுகையில் –

நாடு பாரியதொரு பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்திருந்தது. எனினும், அவற்றை எல்லாம் கடந்து நாடுமீளவும்பழையநிலைமைக்குமீண்டுவரும்தற்போதைய சூழ்நிலையில் நெருக்கடிகளை மேலும் உக்கிரமடையும்செய்யாமல் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடும்அனைத்துவேட்பாளர்கள், மக்களை பிரதிநிதித்துவப்



படுத்தும் அரசியல்வாதிகள் மற்றும்அனைத்து கட்சிகளும் முறையாக செயற்படுவார்கள் என்று நம்புகிறோம். மிகவும் அவதானமாகசெயல்படவேண்டியகட்டாயத்தில் இருக்கிறோம்.

இருப்பினும், அதைவிடுத்து தான்தோன்றித்தனமாக செயல்பட்டு நெருக்கடிகளை வலுப்பெறச் செய்தால், மேலும் பல பாரதூரமான விளைவுகளை சந்திக்க நேரிடும்.

சிறியதொரு தவறை விடுவதன்மூலம்நாம்அனைவரும் கடந்த 6 அல்லது 8 மாதங்களுக்கு முன்னர் முகங்கொடுத்தமை போன்றதொரு இக்கட்டான சூழ்நிலைக்கு மீளவும் கொண்டு சேர்த்துவிடும்.

இதன் மூலம் நாட்டில் பாரியதொரு நெருக்கடி நிலைமை தோற்றம் பெறும். அதாவது அதனை விட மோசமான நிலைமைக்கு நாட்டை தள்ளிவிடும் என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்.

மேலும் எமக்கு அண்மைக் காலமாக சர்வதேச நாடுகளின் ஆதரவுகிடைக்கப்பெறுகின்றது. அதில் துரித முன்னேற்றம் காண கிடைத்துள்ளது. அதாவது முழுமையான ஆதரவு கிடைக்கப் பெறவில்லை என்றாலும் முன்னரை விட ஓரளவு முன்னேற்றத்தைக் கண்டுள்ளோம். ஒத்துழைப்புகளை இல்லாது செய்யாமல் அதனை தக்க வைத்துக் கொள்ள வேண்டும்.

மேலும் நாட்டில் நிலவும் நெருக்கடிகளுக்கு மத்தியில் தேர்தல்நடத்தப்படவேண்டுமா, இல்லையா? அல்லது பிற்போடப்பட்ட வேண்டுமா என்பது தொடர்பில்கதைப்பதைவிடுத்து நாட்டு மக்கள் வாழக்கூடிய நிம்மதியான சூழலை உருவாக்க வேண்டும்.

அதனை உருவாக்க வேண்டிய தருணத்திலும், கட்டாயத்திலும் இருக்கிறோம். இந்நிலையில், அதற்கு இடையூறு விளைவிக்கும் விதமாகசெயற்படவேண்டும்என்று நாம் கேட்டுக்கொள்கிறோம். – என்றார்.

# மொட்டுக்கட்சியின் இருவர் சுயேச்சைக்குழுவில் குதிப்பு!

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கொட்டிகாவத்தை–முல்லேரியா பிரதேச சபையின் உபதலைவர் பிரின்ஸ் குணசேகர சுயேச்சைக்குழுவில் போட்டியிடுவதற்காக வேட்புமனுக்களை தாக்கல் செய்துள்ளார்.

அவர் தொலைக்காட்சி சின்னத்தில் சுயேச்சைக் குழுவில் போட்டியிடுகிறார். பிரின்ஸ் குணசேகர தொடர்ந்து 30 ஆண்டுகள் தோல்வியடையாது கொட்டிகாவத்தை–முல்லேரியா பிரதேச சபையின் உறுப்பினராக பதவி வகித்து வந்துள்ளார்.

பிரின்ஸ் குணசேகரவுடன் பொதுஜன பெரமுனவின் பிரதேச சபை உறுப்பினர் விஜித ரத்நாயக்கவும் இந்த சுயேச்சைக்குழுவில் போட்டியிகிறார்.

அதேவேளை கொட்டிகாவத்தைமுல்லேரியா பிரதேச சபையில் அங்கம் வகிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் 6 உறுப்பினர்கள் இம்முறை தேர்தலில் அந்த கட்சியின் கீழ் போட்டியிடவில்லை என்பது முக்கியமானது.

கொட்டிகாவத்தை–முல்லேரியா பிரதேச சபை கொழும்பு மாவட்டத்தில் அமைந்துள்ள பிரதேச சபைகளில் ஒன்று.



# சிவபூமியின் புதிய ஆச்சிரமம் கண்டியில் கடந்த வாரம் திறப்பு

யாழ்ப்பாணம் சிவபூமி அறக்கட்டளையினர் மலையக மக்களுக்கு சேவை செய்யும் பொருட்டு கண்டியில் இருந்து 20 கிலோ மீற்றர் தொலைவில் அமைந்துள்ள கலஹா எனும் கிராமத்தில் ஓர் ஆச்சிரமத்தினை கடந்த வாரம் திறந்து வைத்தனர்

சிவபூமி அறக்கட்டளையின் தலைவர் கலாநிதி ஆறு திருமுருகன் அவர்களின் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் ஆச்சிரமத்தினை ஆன்மீகசுடர் ரிஷி தொண்டுநாதன் சுவாமிகளும், வணக்கத்துக்குரிய அனுருத்த தேரருமாக இணைந்து சம்பிரதாயபூர்வமாக திறந்து வைத்தனர்.

இங்கிலாந்தை மையமாக கொண்டு தொடாற்றிவரும் அபயம் அறக்கட்டளை இந்த சிவபூமி மலையக ஆச்சிரமத்தில் இலவச மருத்துவ சேவையையும் மாணவர்களுக்கான கல்வி சேவைகளையும் தொடங்கியுள்ளது. அபயம் அறக்கட்டளை சிவபூமி அறக்கட்டளையுடன் இணைந்து ஏற்கனவே வட மாகாணத்தில் மூன்று இடங்களில் இலவச மருத்துவ சேவையை நடத்தி வருகிறது.

அபயம் அறக்கட்டளையின் தலைவர் மருத்துவர் பார்த்தீபன், யாழ் போதான வைத்தியசாலை மருத்துவர் சத்தியமூர்த்தி மற்றும் பல சமய, சமூக, அரசியல் தலைவர்கள் இவ்விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்தனர்.

1.1/2 ஏக்கர் நிலப் பரப்பில் அமைந்துள்ள இந்த சிவபூமி மலையக ஆச்சிரமத்தில் வாராந்த அறநெறிப் பாடசாலை, அன்னதானங்கள் என்பன நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

# உயர்தர பரிட்சை நிலையங்களுக்கு விசேட பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடு!

ஆரம்பமாகியுள்ள உயர்தரப் பரீட்சைக்கான பாதுகாப்புக் கடமைகளுக்காக 1,625 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரி வித்துள்ளனர்.

தேர்வு மையங்கள், ஒருங்கிணைப்பு மையங்கள், வட்டார மற்றும் மத்திய சேகரிப்பு மையங்கள், வினாத்தாள் மதிப்பீட்டு மையங்கள் மற்றும்பிற இரகசிய ஆவணங்களை கொண்டு செல்வதற்கு பொலிஸ் பாதுகாப்பு வழங்கப்படும் என்று தெரிவித்துள்ளனர்.

மேலும், பரீட்சை நடைபெறும் நாளகளில் நாடு முழுவதும் உள்ள பொலிஸ் நிலையங்களில் நடமாடும் ரோந்து மூலம் பரீட்சை நிலையங்களை உன்னிப்பாக அவதானித்து போதிய பாதுகாப்பை வழங்குமாறு பொலிஸ் தலைமையகம் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளது.

உயர்தரப் பரீட்சை நாடளாவிய ரீதியில் 2,200 பரீட்சை நிலையங்களில் நடைபெறுகின்றமையுடன், 3 லட்சத்து 31ஆயிரத்து 709 பரீட்சாத்திகள் பரீட்சையை எதிர்கொள்கிறார்கள் எனத் தெரிவிக்கப்பட் டுள்ளது

# இலங்கை உட்பட உலகெங்கிலும் கைவிடப்பட்டவர்களுக்கு நிதியுதவி!

## துருக்கி மாணவர்கள் முயற்சியால்

துருக்கியின் தென்கிழக்கு மார்டின் மாகாண மாணவர்கள், இலங்கை உட்பட உலகெங்கிலும் உள்ள கைவிடப்பட்டவர்களுக்கு தங்கள் நிதியுதவிக்கரம் நீட்டியுள்ளனர்.

ஒவ்வொரு வகுப்பிலும் ஒரு கைவிடப்பட்ட உடன்பிறப்புகள் உள்ளனர் என்று பெயரிடப்பட்ட ஒரு பிரசாரத்தின் பகுதியாக இந்தத் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் ஹாசி சுபியே போலன்மேஸ் இமாம் ஹாடிப் மேல்நிலைப் பாடசாலை மாணவர்கள் மாதத்துக்கு கிட்டத்தட்ட 5,500 துருக்கிய லிராக்களை (292 டொலர்களை) சேமித்து 22 கைவிடப்பட்ட மாணவர்களுக்கு நிதியுதவி செய்துள்ளனர்.

சூடான், இலங்கை, அல்பேனியா, ஆப்கானிஸ்தான் மற்றும் பாலஸ்தீனத்தில் தேவையுடையவர்களுக்கு இந்த நிதியுதவி வழங்கப்பட்டுள்ளது.

# உள்ளூராட்சி தேர்தலுக்கு இடையூறு ஏற்படுத்த முயற்சிக்கின்றமை தண்டனைக்கு உரிய குற்றம்!

## எச்சரிக்கிறார் அநுரகுமார திஸாநாயக்க



எதிர்வரும் உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கு இடையூறு ஏற்படுத்த முயற்சிப்பது தண்டனைக்குரிய குற்றமாகும் என தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க, திறைசேரி செயலாளர் மஹிந்த சிறிவர்தனவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளார்.

மாளிகாவத்தையில் இடம்பெற்ற பேரணியில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எதிர்வரும் மார்ச் மாதம் 09 ஆம் திகதி நடைபெறவுள்ள தேர்தலுக்கு வேண்டுமென்றே இடையூறு விளைவிப்பது மூன்று வருட கடூழிய சிறைத்தண்டனை விதிக்கக்கூடிய குற்றமாகும்.

அரச வருமானம் பொருளாதார நெருக்கடியால் பாதிக்கப்பட் டுள்ள வேளையில் தேர்தலுக்காக மேலதிக நிதியைப் பெறுகின்றமை திறைசேரிக்கு மிகவும் சவாலானது என சிறிவர்தனவால் கடந்த வெள்ளிக்கிழமை உயர்நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்ட சத்தியக் கடதாசி தொடர்பில் அநுரகுமார திஸாநாயக்க தமது எச்சரிக்கையை விடுத்தார்.

நாடாளுமன்றமேதேர்தலுக்குப் பணம் ஒதுக்க முடிவு செய்துள்ள நிலையில், தேர்தலுக்குத் தேவையான நிதியை வழங்க மறுக்கும் நிதிச் செயலாளரின் அதிகாரம் என்ன என்றும் அவர் இதன்போது கேள்வி எழுப்பியுள்ளார்.

நிதி அதிகாரம் நாடாளுமன்றத்துக்கே உள்ளது என்று கூறிய அநுரகுமார, திறைசேரியின் செயலாளரால் நிதி வழங்கப்படாவிட்டால், அது வேண்டுமென்றே தேர்தலுக்கு இடையூறாகக் கருதப்படும் என்றும் குறிப்பிட்டார்.




# ஆஸி ஓபன் டென்னிஸ்: முதல் நிலை வீராங்கனை இகா ஸ்வியாடெக் தோல்வி

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரின் மகளிர் ஒற்றையர் பிரிவில் முதல் நிலை வீராங்கனையானபோலந்தின் இகாஸ்வியாடெக், கஜகஸ்தானின் எலெனா ரைபகினாவிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார்.

ஆஸ்திரேலியாவின் மெல்பர்ன் நகரில் நடைபெற்று வரும் இந்தத் தொடரில் மகளிர் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்றில் முதல் நிலை வீராங்கனையும், கடந்த ஆண்டு பிரெஞ்சு ஓபன், அமெரிக்க ஓபனில் பட்டம் வென்றவருமான போலந்தின் இகா ஸ்வியாடெக், போட்டித் தரவரிசையில் 22வது இடத்தில் உள்ள கஜகஸ்தானின் எலெனா ரைபகினாவை எதிர்த்து விளையாடினார்.

சுமார் ஒரு மணி நேரம் 29 நிமிடங்கள் நடைபெற்ற இந்த ஆட்டத்தில் விம்பிள்டன் சாம்பியனான ரைபகினா 6-4, 6-4 என்ற நேர் செட்டில் ஸ்வியாடெக்கை வீழ்த்தி கால் இறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

ஓபன் எரா கிராண்ட் ஸ்லாம் போட்டிகளில் 1968ஆம் ஆண்டுக்கு பிறகு ஆடவர் மற்றும் மகளிர் ஒற்றையர் பிரிவில் கால் இறுதி சுற்றுக்கு முன்னதாக போட்டித் தர வரிசையில் முதல் இரு இடங்களில் உள்ள வீரர், வீராங்கனைகள் வெளியேறுவது இதுவே முதன்முறையாகும். இம்முறை ஆடவர் பிரிவில் ரபேல் நடால், காஸ்பர் ரூட் ஆகியோர் தொடக்க நிலையிலேயே தோல்வி அடைந்து வெளியேறி இருந்தனர். மகளிர் பிரிவில் 2ஆம் நிலை வீராங்கனையான துனிசியாவின் ஆன்ஸ் ஜபூரும் 2வது சுற்றில் தோல்வி கண்டிருந்தார்.

மகளிர் ஒற்றையர் பிரிவில் நடைபெற்ற மற்றொரு ஆட்டத்தில் 7ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் கோகோ காஃப் 5-7, 3-6 என்ற நேர் செட்டில் 17ஆம் நிலை வீராங்கனையான லத்வியாவின் ஜெலினா ஓஸ்டாபென்கோவிடம் தோல்வியடைந்தார். அதேவேளையில் 3ஆம் நிலை வீராங்கனையான அமெரிக்காவின் ஜெசிகா பெகுலா 7-5, 6-2 என்ற செட் கணக்கில் 20ஆம் நிலை வீராங்கனையான செக்குடியரசின் பார் போராகிரஜிகோவாவை வீழ்த்தி கால் இறுதி சுற்றுக்கு முன்னேறினார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு 4ஆவது சுற்றில் 6ஆம் நிலை வீரரான கனடாவின் பெலிக்ஸ் அகர் அலியாசிசை 4-6, 6-3, 7-6 (7/2), 7-6 (7/3) என்ற செட் கணக்கில் வீழ்த்தி அதிர்ச்சி கொடுத்தார் செக்குடியரசின் ஜிரி லெஹெக்கா. கடந்த ஆண்டு நடைபெற்ற 4 கிராண்ட் ஸ்லாம் தொடர்களிலும் முதல் சுற்றுடன் வெளியேறிய ஜிரி லெஹெக்கா, இம்முறை 6ஆம் நிலை வீரரை வீழ்த்தி கால் இறுதி சுற்றில் நுழைந்துள்ளது அனைவரது கவனத்தையும் ஈர்த்துள்ளது.

மற்றொரு ஆட்டத்தில் 18ஆம் நிலை வீரரான ரஷ்யாவின் கரேன் கச்சனோவ் 6-0, 6-0, 7-6 (7-4) என்ற செட் கணக்கில் ஜப்பானின் நிஷியோகாவை தோற்கடித்து கால் இறுதிக்கு முன்னேறினார்.

10ஆம் நிலை வீரரான போலந்தின் ஹூபர்ட் ஹர்காக்ஸ் 6-3, 3-6, 2-6, 6-1, 6-7 (7-10) என்ற செட் கணக்கில் 2ஆம் நிலை வீரரான அமெரிக்காவின் செபஸ்டியான் கோர்டாவிடம் தோல்வி கண்டார்.

## பலென்கா, பிளிஸ்கோவா கலிறுதிக்குத் தகுதி பெற்றனர்

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் போட்டியில் பலென்கா, பிளிஸ்கோவா ஆகியோர் காலிறுதிக்குத் தகுதி பெற்றுள்ளனர்.

உலக தர வரிசையில் 5ஆவது இடத்தில் இருக்கும் அரினா பலென்கா (பெலாரஸ்) இன்று காலை நடந்த 4 ஆவது சுற்று ஆட்டத்தில் பெலின்டா பென்சிக்கை (சுவிட்சர்லாந்து) எதிர் கொண்டார். இதில் பலென்கா 7-5, 6-2, என்ற நேர் செட் கணக்கில் வென்று கால் இறுதிக்கு தகுதி பெற்றார். இந்த வெற்றியை பெற அவருக்கு 1 மணி 27 நிமிட நேரம் தேவைப்பட்டது.

24 வயதான பலென்கா முதல் முறையாக ஆஸ்திரேலிய ஓபனில் கால் இறுதிக்கு நுழைந்து உள்ளார். இதற்கு முன்பு கடந்த ஆண்டும், 2021ஆம் ஆண்டும் 4ஆவது சுற்று வரை வந்ததே சிறந்த நிலையாக இருந்தது. பலென்கா கால் இறுதியில் குரோஷியாவை சேர்ந்த டோனாவை சந்திக்கிறார்.

64ஆவது வரிசையில் உள்ள டோனா 4ஆவது சுற்று ஆட்டத்தில் செக்குடியரசுவை சேர்ந்த லின்டாவை 6-2, 1-6, 6-3 என்ற கணக்கில் வீழ்த்தினார். 3ஆவது வரிசையில் உள்ள கரோலினா பினிஸ்கோவா (செக்குடியரசு) 4ஆவது சுற்று ஆட்டத்தில் சீனாவை சேர்ந்த சூயிாங்கை எதிர்கொண்டார். இதில் பிளிஸ்கோவா 6-0, 6-4 என்ற நேர் செட் கணக்கில் எளிதில் வென்று கால் இறுதிக்கு முன்னேறினார். அவர் கால் இறுதியில் போலந்தை மக்டா லினிட்ன சந்திக்கிறார். 4ஆவது வரிசையில் இருக்கும் கரோலின் கார்சியா (பிரான்ஸ்) 4ஆவது சுற்றில் அதிர்ச்சிகரமாக தோற்றார். மக்டா லினிட் 7-6 (7-3), 6-4 என்ற கணக்கில் கார்சியாவை வீழ்த்தினார். லினிட் முதல் தடவையாக கால் இறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.





# ஆஸி. ஓபன் டெனிஸில் கவனம் ஈர்த்த தமிழர்கள்

ஆஸ்திரேலிய ஓபன் டென்னிஸ் தொடரில் தமிழ்நாட்டைச் சேர்ந்த ஜீவன் நெடுஞ்செழியன், ஸ்ரீராம் பாலாஜி இணை போட்டித்தரவரிசையில் 5ஆவது இடத்தில் உள்ள குரோஷியாவின் இவான்டுடிக், அமெரிக்காவின் ஆஸ்டின் கிரஜிசெக் ஜோடியை வீழ்த்தி அனைவரது கவனத்தையும் ஈர்த்தது.

ஆண்டின் முதல் கிராண்ட் ஸ்லாம் போட்டியான ஆஸ்திரேலியன் ஓபன் டென்னிஸ் மெல்பர்ன் நகரில் நடைபெற்று வருகிறது. உலகில் உள்ள முன்னணி வீரர், வீராங்கனைகள் இந்தத் தொடரில் கலந்துகொண்டு விளையாடி வருகின்றனர். இதேபோன்று இரட்டையர், கலப்பு இரட்டையர்கள் பிரிவிலும் முன்னணி இணைகள் பங்கேற்றுள்ளன.

மதிப்புமிக்க இந்தத் தொடரில் ஆடவர் இரட்டையர் பிரிவில் இந்தியாவின் ஜீவன் நெடுஞ்செழியன் ஸ்ரீராம் பாலாஜி மாற்று ஜோடிகளின் பட்டியலில் இடம் பெற்றிருந்தனர். தமிழ்நாட்டைச் சேர்ந்த இவர்கள் மாற்று பட்டியலில் 9ஆவது இடத்தில் தங்களது வாய்ப்புக்காக காத்திருந்தனர். இவர்களுக்கு மேல் இருந்த சில இணைகளுக்கு வைல்டு கார்டு வாய்ப்பு கிடைத்தது. சில விலகின. இதனால் முதன்மைச் சுற்றுக்கான வாய்ப்பைப் பெறுவதில் ஓர் இடம் மட்டுமே முன்னேற வேண்டும் என்ற நிலையே ஜீவன்- பாலாஜி ஜோடிக்கு இருந்தது.

கிடைத்த வாய்ப்பை சென்னையைச் சேர்ந்த ஜீவனும், கோவையைச் சேர்ந்த ஸ்ரீராமும் சரியாகப் பயன்படுத்திக் கொண்டனர். இந்த இணை தங்களது முதல் சுற்றில் போட்டித் தரவசையில் 5ஆவது இடமும், கடந்த ஆண்டு பிரெஞ்சு ஓபனில் 2ஆவது இடமும் பிடித்த இணையுடன் மோதியது. குரோஷியாவின் இவான்டுடிக், அமெரிக்காவின் ஆஸ்டின் கொண்ட இணை பலமானது என்று ஏற்கனவே கணிக்கப்பட்டிருந்தது.

முதல் செட்டை 7-6 என்ற கணக்கில் வென்ற ஜீவன்- பாலாஜி இணை 2ஆவது செட்டை 2-6 என பறிகொடுத்தது. ஆனால் கடைசி செட்டில் 6-4 எனப் பதிலடி கொடுத்து வெற்றியை வசப்படுத்தியது. எனினும் ஜீவன் - பாலாஜி ஜோடியால் 2ஆவது சுற்றை வெற்றிகரமாக கடக்க முடியாமல் போனது. இந்த ஜோடி 4-6, 4-6 என்ற செட் கணக்கில் பிரான்ஸின் ஜெர்மி சார்டி, ஃபேப்ரீஸ் மார்ட்டின் இணையிடம் தோல்வி கண்டது.

## இலங்கையை தோற்கடித்தது இந்திய மகளிர் கிரிக்கெட் அணி

இலங்கைக்கு எதிரான 19 வயதுக்குட்பட்டோருக்கான மகளிர் ரி20 உலகக் கோப்பை ஆட்டத்தில் இந்திய அணி 7 விக்கெட் வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.

தனது முதல் ஆட்டத்தில் தென்னாப்பிரிக்க அணியை எளிதாக வீழ்த்திய இந்திய அணி, 2ஆவது ஆட்டத்தில் ஐக்கிய அரபு அமீரக அணியை 122 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வென்றது. 3வது ஆட்டத்தில் ஸ்காட்லாந்தை 83 ரன்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது. ஆனால் 4ஆவது ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவிடம் 7 விக்கெட் வித்தியாசத்தில் தோற்றது.

தனது அடுத்த ஆட்டத்தில் இலங்கையை எதிர்கொண்டது இந்திய மகளிர் அணி. முதலில் துடுப்பெடுத்தாடியது இலங்கை மகளிர் அணி, 20 ஓவர்களில் 9 விக்கெட் இழப்புக்கு 59 ரன்கள் மட்டும் எடுத்தது. பர்வி சோப்ரா 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார். இந்திய அணி 7.2 ஓவர்களில் 3 விக்கெட் இழப்புக்கு 60 ரன்கள் எடுத்து பெரிய வெற்றியை அடைந்தது. ஃபாலி 15 ரன்களுக்கும் ரிச்சா கோஷ் 4 ரன்களுக்கும் ஆட்டமிழந்தார்கள்.